**41. அப்பூதியடிகள் கதை**

அப்பூதியடிகள் என்பவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர்.



சோழவள நாட்டில் திங்களூரில் அந்தணர்குலத்தில் தோன்றியவர். அருந்ததியனைய கற்புடைய அணங்கினை மணந்து இல்லறத்தை இனிது நடத்திக்கொண்டிருந்தார். விருந்தோம்புதலே இவருடைய திருந்திய பண் பாக அமைந்து நின்றது. மக்களுஞ் சிலர் தோன்றினர். திருநாவுக்கரசுநாயனார் என்னும் அப்பர் இடத்தில் இவர் அளவு கடந்த அன்புகொண்டு விளங்கினார்.



தாமியற்றிய அறச் சாலைகளிலெல்லாம் திருநாவுக்கரசருடைய பெயரையேஎழுதிவைத்தார். தம் பிள்ளைகளுக்கும் திருநாவுக்கரசு என் னும் பெயரையே இட்டார். தம் பிள்ளைகளில் ஒன்றுஇறந்த பொழுதுகூட அதனை ஒருபொருளாக மதியாமல் விருந் தளிக்கத் தொடங்கினார். ஒருவர் இல்லறத்தில்இருந்து பொருளைக் காத்து வாழ்க்கையை நடத்துவதெல்லாம், விருந்தினரைப் போற்றி அவர்களுக்கு உதவிசெய்தற் பொருட்டேயாம் என்னும் உண்மையை இவர் உலகத்திற்கு நன்கு உணர்த்தினார்.



திருநாவுக்கரசரின்பெயர் போற்றலும் விருந்தோம்புதலுமே இவருக்கு வீடு பேற்றை யளித்தன. "உற்றானலன் தவம்தீயில்நின்றானலன் ஊண்புனலா அற்றானல னுகர்வுந் திருநாவுக் கரசெனுமோர் சொற்றா னெழுதியுங் கூறியுமேஎன்றுந் துன்பில்பதம் பெற்றான் ஒருநம்பி அப்பூதி என்னும் பெருந்தகையே.

(நால்வர் நான்மணிமாலை)

(விருந்தோம்பல்]